*1990 சனவரி 19]*

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான 6 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. இந்த நிலத்தைக் கையகப் படுத்துவதற்கான வேண்டுகோள் வருவாய்த் துறை அதிகாரி களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நேரு அவர்களிடத்தில் மின்துறை இருந்தபோது கடந்த ஏப்ரல் திங்கள் 9ஆம் நாளன்று கிருஷ்ண கிரியில் துணை மின் நிலையம் அமைக்கத் தோதான இடம் வந்து பார்க்கச் சொல்லி, நாங்கள் வேண்டுகோள் விடுக்க, அவர்களும் வந்து பார்த்தார்கள். ஆனால் முழுமையாக எட்டுத் திங்கள் கழிந்து விட்ட நிலையில், மேலும் காலம் தாழ்த்தாமல் கிருஷ்ண கிரியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு உடனடியாக ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 8 மாதத்திற்கு முன்னாலே வேண்டுகோள் விட்டாலும் இப்போது அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் துணை மின் நிலையமே 1994—95ஆம் ஆண்டில்தான் நிறுவப்பட இருக் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளம்பிள்ளையில் துணை மின் நிலையம் அமைத்தல்.

*5300. திரு. பெ. வெங்கடாசலம் :
மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், இளம்பிள்ளையில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை தொடங்கப்பெறும்?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1994—95 ஆம் ஆண்டு இந்தப் பணியைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

9.55 மணி

திரு. பெ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இளம்பிள்ளைப் பகுதியைச் சுற்றி விவசாயிகள் இருக்கிற பகுதியாகவும், விசைத்தறியாளர்கள் இருக்கிற பகுதியாகவும், மேலும் சிறிய பேக்டரிகள் இருக்கிற பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினால் இந்தத் துணை மின் நிலையத் திட்டத்தை வெகு விரைவில் அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் இளம்பிள்ளையில் 110/22 கே. வி. துணை மின் நிலையம் 8-வது திட்ட காலத்தில் அமைப்பதற்காக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. 8-வது ஐந்தாண்டுத் திட்டம் அடுத்த ஆண்டு தொடங்க இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. பெ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு இளம்பிள்ளை பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதாக இருந்தது. ஆனால் ஏதோ ஒரு காரணத்தால், அந்தத் துணை மின் நிலையம் அங்கிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் உள்ள நல்லசமுத்திரம் என்ற பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டது. இருப்பினும், இப்போது இந்தத் துணை மின் திட்டத்தை உடனடியாக அமைக்க ஏற்பாடு செய்து கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் இருக்கும் என்பதையும் கருத்தில் கொண்டு, இதனை உடனடியாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசியம் அரசு இதைப் பரிசீலிக்கும்.

### விவசாய விளை பொருள்கள் கொள்முதல்.

*2141. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாய விளைபொருள்களை அரசே ஆதரவு விலை (Support Price) கொடுத்துக் கொள்முதல் செய்வதற்கான திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?